// இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
வர்த்தமானப் பத்திரிகை

2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆம் திகதிய
பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2026.02.24 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)

# உண்ணாட்டரசிறை (திருத்தம்)

## 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களால்
பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 244.80** **தபாற் செலவு : ரூபா 150.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2 :*** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் ஏனைய மூலங்களிலிருந்து ஆளொருவரின் ஈட்டுகைகளையும் இலாபங்களையும் கணக்கிடுகின்றபோது மோட்டார் வாகனங்களின் தேறிப் பெறுகையிலிருந்து பெறப்படுகின்ற ஈட்டுகைகளை விலக்கிவைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்வதுமாகும்.

***வாசகம் 3 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் பின்வருவனவாகும் –

(அ) அத்தகைய கொடுப்பனவு வங்கிக் கணக்கில் வைப்பு என்ற வழிவகையாக செய்யப்பட்டிருந்தாலொழிய, கொடுக்கல் வாங்கலொன்றுக்கான கொடுப்பனவு தொடர்பில் கழிப்பனவொன்றை அனுமதிக்காமைக்கு ஏற்பாடுகளைச் செய்வதாகும்; அத்துடன்

(ஆ) சிங்கள உரையிலுள்ள பிழையொன்றை சீராக்குவதற்குமாகும்.

***வாசகம் 4 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவின் தெளிவுத் தன்மையை மேம்படுத்துவதற்கு திருத்துகின்றது.

***வாசகம் 5 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது இலங்கை அரசாங்கத்திற்கு அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாக கருதப்படுகின்ற பல்கலைக்கழகத்திற்கு சொத்துக்களை கைமாற்றுகின்ற பிரிவின் ஏற்புடைமையை நீட்டிப் பதற்கானதுமாகும்.

***வாசகம் 6 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது குறித்தசில தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளை அனுப்புவதனை கொண்டு செல்வதற்கும் அவற்றை அடுத்துறும் மதிப்பீட்டாண்டுகளில் கழிப்பனவு செய்வதற்கானதுமாகும்.

***வாசகம் 7 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்திற்கு 52அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதென்பதுடன், அப்பிரிவின் சட்டப்பயனானது தனியாளொருவரின் மதிப்பிடற்பாலதான வருமானத்தை கணக்கிடுகின்றபோது, விலக்களிக்கப்பட வேண்டிய மற்றும் உள்ளடக்கப்பட வேண்டிய ஆயுட் காப்புறுதிப் பத்திரங்களின் கீழ் பெறப்பட்ட பெறுவனவுகளின் வகைகளைக் குறித்துரைப்பதற்கானதுமாகும்.

***வாசகம் 8 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது கூறு நம்பிக்கைப்பொறுப்பினால் கூறு வைத்திருப்பவருக்கு சான்றிதழை வழங்குவதற்கான தவறுகையின் விளைவுகளை ஏற்பாடு செய்கின்றது.

***வாசகம் 9 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், பிரிவின் சட்டப்பயன் பின்வருவனவாகும் –

(அ) பிரிவின் தெளிவுத்தன்மையை மேம்படுத்துவதற்கும்; அத்துடன்

(ஆ) காப்புறுதி வியாபாரத்திற்கு ஏற்புடையதாகக்கூடிய இலங்கை கணக்கியல் தர நிலைகளுக்கான திருத்தங்களுக்கமைவாக அவசியமான சரிக்கட்டுதல்களை ஆணையாளர் தலைமையதிபதிக்கு குறித்துரைப்பதற்கு இயலச்செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்வதுமாகும்.

***வாசகம் 10 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது குறித்தசில நிபந்தனை களுக்கமைவாக ஆணையாளர் தலைமையதிபதிக்கு தரும நிறுவனங்களுக்கு வரி வரவுகளை வழங்க இயலச்செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்வதுமாகும்.

***வாசகம் 11 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 69 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது வருமான வரி நோக்கங்களிற்காக வதிவாக இருக்கவேண்டியதல்லாத தனியாளின் சூழ்நிலைகளுக்கு ஏற்பாடு செய்கின்றது.

***வாசகம் 12 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது வருமானத்தைக் கணக்கிடுகின்றபோது இலங்கையில் மூலமொன்றைக் கொண்டிராத இலங்கையிலிருந்து பண்டங்களை அல்லது சேவைகளை ஏற்றுமதி செய்வதிலிருந்து பெறப்படுகின்ற செலுத்துகைகளை விலக்கி வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதுமாகும்.

***வாசகம் 13 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவை திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது 2025, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து தலைமை அலுவலக செலவினத்துக்கு வதிவற்ற ஆளொருவரை அனுமதிப்பதற்கு ஏற்பாடுகளை செய்வதற்கானதாகும்.

***வாசகம் 14 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையை கோப்பு வரிவிபரத்திரட்டுக்களை கோப்பிடுவதற்கும் பிடித்து வைத்தல் வரியிலிருந்து குறித்தசில வட்டியை விலக்களிப்பதற்குமான ஏற்பாட்டைச் செய்வதற்கு தேவைப்படுத்துவதற்கும்.

***வாசகம் 15 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது சுயாதீன சேவை வழங்குநர்கள் தொடர்பில் பிடித்து வைத்தல் வரியின் ஏற்புடைமையின் நோக்கெல்லையை விரிவாக்குவதற்கானதாகும்.

***வாசகம் 16 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பிடித்து வைத்தல் வரி கழிப்பனவுகள் தொடர்பில் வருடாந்த கூற்றுக்கள் மற்றும் காலாண்டுக் கூற்றுக்களை கோப்பிடுவதற்கான நடவடிக்கைமுறைகள், படிமுறைகள் மற்றும் படிவங்களை குறித்துரைப்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதிக்கு இயலச் செய்வதுமாகும்.

***வாசகம் 17 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பிடித்து வைத்தல் முகவர், பிடித்து வைத்தற் சான்றிதழ்களை கட்டணமெதுவுமின்றி இலவசமாக வழங்குவதை உறுதிப்படுத்துவதுமாகும்.

*வாசகம் 18 :* இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 90 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது 2026, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து தவணைக் கொடுப்பனவு செலுத்துநரினால் செலுத்தப்படற்பாலதான வரியின் தவணைக் கொடுப்பனவுகளின் கணக்கீட்டு முறைமையை ஏற்பாடு செய்கின்றது.

***வாசகம் 19 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 91 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது 2026, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு, மதிப்பீடு செய்யப்பட்ட வரியொன்றை கோப்பிடுவதற்கு தேவைப்பாட்டை மட்டுப்படுத்துவதற்கானதாகும்.

***வாசகம் 20 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 92 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், 19 ஆம் வாசகத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந்தன்மையானதாகும்.

**வாசகம் 21 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பின்வருவனவாகும் –

(அ) வரிவிபரத்திரட்டொன்றை கோப்பிடுவதற்கான தேவைப்பாட்டிலிருந்து குறித்துரைக்கப்பட்ட தனியாட்களை விலக்குவதற்கும்; அத்துடன்

(ஆ) 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் மூலோபாய முக்கியத்து வமிக்க வியாபாரத்தை கொண்டு நடாத்துகின்ற எவரேனுமாளை வரிவிபரத்திரட்டொன்றை கோப்பிடத் தேவைப்படுத்துவதற்குமாகும்.

***வாசகம் 22 :*** இவ்வாசகம், தெளிவுப்படுத்தும் நோக்கத்திற்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 95 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 23 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 96அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதென்பதுடன், பிரிவின் சட்டப்பயனானது ஊழியர்களால் பெறப்பட்ட சம்பள நிலுவைகளை வரி கடனை அளிப்பதற்கு ஏற்பாடு செய்கின்றது.

***வாசகம் 24 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது தகவலை வெளிப்படுத்துவதற்கு தொடர்பில் பிரிவின் நோக்கெல்லையை மேம்படுத்துவதுமாகும்.

***வாசகம் 25 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது ஆணையாளர் தலைமையதிபதியுடன் பதிவு செய்வதற்கான காலப்பகுதியை குறித்துரைப்பதாகும்.

***வாசகம் 26 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 103 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது வ.இ.இ சான்றிதழை சமர்ப்பிப்பதற்கு தேவைப்படும் ஆளொருவராகவுள்ள சூழ்நிலைகளை குறித்துரைப்பதற்கானதாகும்.

***வாசகம் 27 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது எழுத்துமூலமாகவோ அல்லது இலத்திரனியல் மூலமாகவோ வரிவிபரத்திரட்டை கோப்பிட சிரேட்ட பிரசையொருவரை இயலச்செய்வதுமாகும்.

***வாசகம் 28 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது ஏதேனும் நீதிமன்ற நடவடிக்கைகளில் அல்லது வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு நடவடிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப் படாத ஏதேனும் ஆவணம் அல்லது தகவலை தயாரிப்பதை தடுப்பதுமாகும்.

***வாசகம் 29 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பிரிவின் நோக்கெல்லையை மேம்படுத்துவதுமாகும்.

***வாசகம் 30 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 150 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது சிரேட்ட பிரசைகள் மற்றும் ஒப்பந்தங்களின் கீழ் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளும் ஆட்கள் தொடர்பில் வரிமீள் நிதியக் கொடுப்பனவுகளை ஏற்பாடு செய்கின்றது.

***வாசகம் 31 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது வரி செலுத்தத் தவறுவதற்கு ஆட்களுக்கு எதிரான வழக்குகளை தொடுக்கும் நடவடிக்கை முறைகளுக்கு ஏற்பாடுகளை செய்வதுமாகும்.

***வாசகம் 32 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 175அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதென்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது அழைப்பாணைகளையும் அறிவித்தல்களையும் சேர்ப்பிப்பது தொடர்பான ஏற்பாடுகளைச் செய்வதுமாகும்.

***வாசகம் 33 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 178அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதென்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறையுடன் இணங்கியொழுகத் தவறுவதற்கும் பொய்யான தகவலை வழங்குவதற்கும் பிடித்து வைத்தல் முகவர்களும் தனியாட்களும் தண்டத்திற்கு பொறுப்பாக்குவதற்காகும்.

***வாசகம் 34 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் XVIIஅ என்னும் புதிய அத்தியாயத்தினை உட்புகுத்துகின்றதென்பதுடன் அவ்வத்தியாயத்தின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகை தொடர்பில் வழக்கைத் தொடுப்பதற்கு ஏற்பாட்டைச் செய்கின்றது.

***வாசகம் 35 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 193 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது குற்ற வழக்கு தவறுகளுக்காக குறித்தசில நிபந்தனைகளை ஏற்பாடு செய்வதற்கானதுமாகும்.

***வாசகம் 36 :*** இவ்வாசகம், தெளிவுத்தன்மை என்னும் நோக்கத்திற்காக முதன்மைச் சட்ட வாக்கத்தின் 195 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுமாகும்.

***வாசகம் 37 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 202 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பிரிவின் ஏற்புடைமையின் தெளிவினை அதிகரிப்பதற்கானதுமாகும்.

***வாசகம் 38 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 203 ஆம் பிரிவை தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக திருத்துகின்றது.

***வாசகம் 39 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அட்டவணையின் சட்டப்பயனானது இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து பயனுறும் வகையில் தனியாட்கள், பங்காண்மைகள், நம்பிக்கைப் பொறுப்புகள், கம்பெனிகள், கூறு நம்பிக்கைப் பொறுப்புகள் மற்றும் அரசாங்க ஒழுங்கமைப்புகள் என்பவற்றுக்கான வரிவீதத்தை குறித்துரைப்பதுமாகும்.

***வாசகம் 40 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அவ்வட்டவணையின் சட்டப்

பயனானது குறித்தசில முதலீடுகளுக்கு ஊக்குவிப்புகளை அளிப்பதற்கான தேவைப்பாடுகளை குறித்துரைப்பதற்கானதுமாகும்.

***வாசகம் 41 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் முன்றாம் அட்டவணையைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அட்டவணையின் சட்டப் பயனானது குறித்தசில கருத்திட்டங்கள் மற்றும் தொழில்கள் என்பனவற்றுக்கு அளிக்கப்பட்ட விலக்களிப்புகள் தொடர்பில் மேலதிக தெளிவுபடுத்தல்களை ஏற்பாடு செய்வதற் கானதுமாகும்.

***வாசகம் 42 :*** இவ்வாசகம், அவ்வட்டவணையின் சிங்கள உரையிலுள்ள பிழையை திருத்துவதற்கு முதன்மைச் சட்டவாக்கத்துக்கான நான்காம் அட்டவணையை திருத்து கின்றது.

***வாசகம் 43 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் ஐந்தாம் அட்டவணையைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அவ்வட்டவணையின் சட்டப் பயனானது குறித்தசில நிபந்தனைகளுக்கமைவாக தரும நிறுவனங்களுக்கு செய்யப்படும் நன்கொடைகளுக்கான தகைமையளிக்கின்ற கொடுப்பனவுக் கழிப்பனவுகளை அனுமதிப்பதுமாகும்.

***வாசகம் 44 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஆறாம் அட்டவணையை திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அட்டவணையில் சட்டப்பயன் குறித்தசில தற்காலிக வரிவிலக்குகளின் ஏற்புடைமை தொடர்பிலான காலப்பகுதியை குறித்துரைப்பதற்கு திருத்துவதற்கானதுமாகும்.

***வாசகம் 45 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கம், 2022 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, மிகைக் கட்டண வரிச்சட்டம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச்சட்டம் என்பவற்றின் குறித்தசில ஏற்பாடுகளின்கீழ் விதிக்கப்பட்ட வட்டியை தள்ளுபடி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றது.

ச.வ.-ஒ. 14/2025

## 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

1.(1) இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப் படலாம்.

(2) இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பிரிவுகளின் ஏற்பாடுகள் தவிர்ந்த இச் சட்டத்தின் ஏற்பாடுகள், சட்டமூலமானது எத்தேதியன்று பாராளுமன்றச்சட்டமொன்றாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) கீழேயுள்ள பட்டியலின் நிரல் II இல் குறித்துரைக்கப் பட்டவையும் (இதனகத்துப்பின்னர் “முதன்மைச்சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளைத் திருத்துகின்றனவையும் அப்பட்டியலின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டவையுமான இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அப்பட்டியலின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்டவாறான அந்தந்தத் தேதிகளில் விடயத்துக்கேற்ப, நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நடைமுறைக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

PL 15663 - 470(2026/02)

பட்டியல்

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *இச்சட்டத்தின் பிரிவு* | *திருத்தப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு* | *நடைமுறைக்கு வரும் தேதி* |
| 2 | 8 | 01.04.2024 |
| 3 | 10(2அ) | 08.05.2023 |
| 4 | 18(5) | 01.04.2025 |
| 6 | 52 | 01.04.2025 |
| 7 | 52அ | 01.04.2025 |
| 8 | 59(1அ) மற்றும் (2) | 01.04.2025 |
| 9 | 67(1), (1அ) (2) மற்றும் (2அ) | 01.04.2025 |
| 10 | 68(3) | 01.04.2025 |
| 11 | 69(1) (ஈ), (1அ) மற்றும் (2அ) | 01.04.2025 |
| 12 | 72(3) | 01.04.2018 |
| 13 | 79(1), (2) மற்றும் (3) | 01.04.2025 |
| 14(1) (ஆ) | 84(2) (ஆ) | 01.04.2026 |
| 14(2) (இ) | 84(3) (ஊ) | 01.04.2025 |
| 18 | 90(3) மற்றும் (6) | 01.04.2026 |
| 19 | 91(1), (3), (4), (5) மற்றும் (6) | 01.04.2026 |
| 20 | 92(1) | 01.04.2026 |
| 21 | 94(1) | 01.04.2025 |
| 23 | 96(அ) | 01.01.2024 |
| 38 | 203(6) | 31.03.2025 |
| 39 | முதலாம் அட்டவணையின் 4 ஆம் பந்தியின் (2ஆ) என்னும் உட்பந்தியின் (ஆ) என்னும் விடயம் | 01.04.2022 |

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| இச்சட்டத்தின் பிரிவு | திருத்தப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு | நடைமுறைக்கு வரும் தேதி |
| 40 | இரண்டாம் அட்டவணையின் (1அ) மற்றும் (2அ) என்னும் உட்பந்திகள் | 01.04.2026 |
| 41 | மூன்றாம் அட்டவணையின் பந்தி (அ) (iv) | 01.04.2018 |
| 42 | மூன்றாம் அட்டவணையின் பந்திகள் (i) (ii), (த) மற்றும் (நநந) | 01.04.2025 |
| 43 | ஐந்தாம் அட்டவணை | 01.04.2025 |
| 44 | ஆறாம் அட்டவணை | 01.04.2024 |

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்

**2.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது அப் பிரிவின் (2)ஆம் உட்பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப் படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவில் "எத்தகையதுமான எம்மூலத்தி லிருந்தேனும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏனைய மூலங்களிலிருந்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "கொடுப் பனவுகளும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கொடுப்பனவுகளும்;" என்னும் சொற்களை

இடுவதன் மூலமும்; "உள்ளடக்கப்படுகின்ற தொகைகள்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "உள்ளடக்கப்படுகின்ற தொகைகள்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை சேர்ப்பதன் மூலமும்:-,

"(இ) மோட்டார் வாகனங்களின் தேறிப்பெறுகை யிலிருந்தான ஈட்டுகைகள்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் (ஆ) என்னும் பந்தியின் (viii) ஆம் உட்பந்தியில் "ஒதுக்குக் கைமாற்றியுள்ள தொகையொன்று அல்லது இதுவரை உறப்படாத ஆனால் ஓர் எதிர்கால வரிமதிப்பீட்டாண்டில் உறப்படுவதற்கு எதிர்பார்க் கப்பட்ட செலவினங்களுக்கான அல்லது நட்டங்களுக்கான நிதி ஏற்பாடு;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒதுக்குக் கைமாற்றியுள்ள தொகையொன்று அல்லது இதுவரை உறப்படாத ஆனால் ஓர் எதிர்கால வரிமதிப்பீட்டாண்டில் உறப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செலவினங் களுக்கான அல்லது நட்டங்களுக்கான நிதி ஏற்பாடு;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவில்-

(அ) (அ) என்னும் பந்தியில் "வங்கிவரைவொன்று என்ற வகையாகவல்லாது வேறு வகையில் அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வங்கிவரைவொன்று என்ற வகையாக வல்லாது வேறு வகையில் அல்லது

இரண்டாவது குறிப்பிடப்பட்ட ஆளின் வங்கிக்கணக்கில் பணத்தை வைப்புச் செய்வதால் அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) (ஆ) என்னும் பந்தியில் –

(i) (i) ஆம் உட்பந்தியில் "ஏதேனும் கொடுப்பனவுக்கு;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் கொடுப்பனவுக்கு அல்லது கொடுப்பனவால்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ii) (ii) ஆம் உட்பந்தியில் "ஏதேனும் கொடுப்பனவுக்கு; என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் கொடுப்பனவுக்கு அல்லது கொடுப்பனவால்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவானது அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

"(5) இப்பிரிவின் நோக்கத்திற்காக –

(அ) "ஒதுக்குகள்" என்பது எதிர்மறையாக பெறப்பட்ட ஈட்டுகைகள், ஒதுக்குகளிலிருந்து திரட்டப்பட்ட நட்டங்கள் அல்லது இருப்புக்கள், ஆனால் ஏதேனும் சொத்தின் மீள்பெறுமதி மதிப்பீட்டிலிருந்து எழுகின்ற ஒதுக்குகளை விலக்கி வைக்கின்றது; அத்துடன்

(ஆ) உருவகமொன்றின் எதிர்மறையாக பெறப்பட்ட ஈட்டுகைகள், ஒதுக்குகளிலிருந்து

திரட்டப்பட்ட நட்டங்களை அல்லது இருப்புக்களை கொண்டிருக்குமிடத்து "உருவகத்தின் வழங்கப்பட்ட மொத்தப் பங்கு மூலதனமும் ஒதுக்குகளும்" அத்தகைய எதிர்மறையாக ஈட்டப்பட்ட ஈட்டுகைகள், ஒதுக்குகளிலிருந்து திரட்டப் பட்ட நட்டங்கள் அல்லது இருப்புக்கள் என்பவற்றைக் கணக்கிலெடுத்து கணக்கிடப்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவானது அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

"(3அ) இலங்கை அரசாங்கத்திற்கு அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படக்கூடியதாக கருதப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகத்திற்கு சொத்தொன்றை கொடையாகவோ அல்லது அதன் நன்கொடை யாகவோ சொத்தின் சொத்தாண்மையாகவோ கைமாற்றுவதன் மூலம் ஆளொருவர் சொத் தொன்றைத் தேறிப்பெறுமிடத்து, அவ்வாள் தேறிப் பெறுகைக்கு நேர்முன்னர் சொத்தின் தேறிய ஆகுசெலவுக்குச் சமமாக அத்தேறிப் பெறுகை தொடர்பிலான தொகையொன்றைப் பெற்றுக் கொள்பவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவானது அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

"(4) இயைபான வரிமதிப்பீட்டாண்டில் மொத்த மதிப்பிடற்பாலதான தொகையானது,

தனியாளொருவரின் அல்லது உருவகமொன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தை கணிப்பதில் கழிக்கப்படவேண்டிய தகைமை யளிக்கின்ற கொடுப்பனவுத் தொகை விஞ்சாத காரணத்துக்காக, 2025, ஏப்பிறல் 1 ம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டொன்றுக்காக ஐந்தாம் அட்டவணையின் 1 ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியின் (i) ஆம் மற்றும் (v) ஆம் விடயங்களில் குறிப்பீடுசெய்யப்பட்டஏதேனும்தகைமையளிக்கின்ற கொடுப்பனவின் கழிப்பீடானது, அப்பிரிவின் சாத்தியமற்றதாகின்றவிடத்து, இயைபான வரிமதிப் பீட்டாண்டில் கழிக்கப்படுவதற்கு சாத்தியமில்லாத அத்தகைய தகைமையளிக்கின்ற கொடுப்பனவின் தொகையானது, இயைபான வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துறுகின்ற வரிமதிப்பீட்டாடொன்றில் தனியாள் அல்லது உருவகமொன்றின் மதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்து அல்லது அடுத்துறுகின்ற ஏதேனும் தொடர் ஆண்டின் மதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்து முன்னோக்கி கொண்டு செல்லப்படுதலும் கழிக்கப்படுதலும் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்திற்கு பிரிவு 52அ இனை உட்புகுத்துதல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுவதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 52அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:-

“ஆயுட் காப்புறுதிப் பத்திரங்களி லிருந்தான தொகைகள்

**52அ.**(1) இச்சட்டத்துக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், 4 ஆம் பிரிவின் கீழ் வரிமதிப் பீட்டாண்டொன்றுக்கான தனியாளொருவரின் மதிப்பிடற்பாலதான வருமானத்தைக் கணக்கிடு வதில் -

(அ) காப்புறுதியாளரின் இறப்பின்மேல்;

(ஆ) பத்திரத்தின் முதிர்ச்சியின்மேல்;

(இ) பத்திரத்தின் ஒப்படைப்பின்மேல்,

அத்தகைய பத்திரத்தை வைத்திருப்பவராக விருந்தாலுஞ்சரி அல்லது பயனாளியாக இருந்தாலுஞ்சரி ஆயுட் காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் தனியாளொருவரால் பெற்ற அல்லது பெறப்படவுள்ள ஏதேனும் தொகையானது விலக்களிக்கப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவானது ஆயுட் காப்புறுதிப் பத்திரத்துடன் சம்பந்தப்பட்ட அல்லது அதன் கீழ் செய்யப்படும் பின்வரும் கொடுப்பனவுகளுக்கு ஏற்புடையதாதலாகாது:-

(அ) ஊழிய வருமானம் அல்லது தொழில் வருமானத்தை அமைத்துருவாக்குகின்ற ஆயுட் காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் பெறப்பட்ட ஏதேனும் தொகை; அல்லது

(ஆ) காப்புறுதி செய்யப்பட்ட ஆளின் மரணம் அல்லது பத்திரத்தின் முதிர்ச்சி தவிர்ந்த, ஆயுட் காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் பெறப்பட்ட ஏதேனும் ஆண்டுத்தொகை அல்லது ஏதேனும் ஓய்வூதியம், பணிஓய்வு அல்லது ஓய்வூதியக் கொடுப்பனவு அல்லது ஏதேனும் கொடுப்பனவு.

(3) இப்பிரிவிலுள்ளதெதுவும் 35 ஆம் பிரிவின் ஏற்புடைமையை மட்டுப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "ஆயுட் காப்புறுதிப் பத்திரம்" என்பது 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதி தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட காப்புறுதியாளரால் வழங்கப்

பட்ட காப்புறுதி ஒப்பந்தமொன்றாக கருதப் படுதல் வேண்டும். இது தனியாளொருவரின் இறப்பின் மீது பணக் கொடுப்பனவை வழங்கு கின்றது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவைத் திருத்துதல்

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1அ) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், 2025, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டி லிருந்து பயனுறும் கூறு நம்பிக்கைப் பொறுப் பொன்று அல்லது பரஸ்பர நிதியமொன்று மார்ச் முப்பத்தோராம் நாளன்று முடிவடையும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டும் முடிவடைந்த பின்னர் ஐந்து மாதங்களுக்குள் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப் பட்டதான வருமான விபரங்கள், விலக்களிக்கப் பட்ட தொகைகள், பிடித்து வைத்தல் வரி மற்றும் வேறு எவையேனும் தகவல்கள் அடங்கிய சான்றிதழ் ஒன்றைக் கூறு உடைமையாளர் ஒவ்வோராளுக்கும் வழங்கத் தவறும் பட்சத்தில், இலங்கையில் வதியும் கம்பனியாக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இலங்கையில் வதியும் கம்பெனிகள் தொடர்பிலான இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலும் வேண்டும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஓராம் உட்பிரிவின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஓராம் அல்லது (1அ) என்னும் உட்பிரிவின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அவ் வியாபாரத்திலிருந்தான எந்த ஈட்டுகை களினதும், இலாபங்களினதும் மீது வரி செலுத்தப்படற்பாலதோ," என்னும் சொற்களுக்குப் பதிலாக "2025, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னரான வரிமதிப்பீட்டாண்டொன்றிற்காக அவ்வியாபாரத்திலிருந்தான எந்த ஈட்டுகை களினதும், இலாபங்களினதும் மீது வரிசெலுத்தப் படற்பாலதோ," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1அ) தொழிலிருந்தான வருமானத்தை அடைவதில், 19 ஆம் பிரிவின் கீழ் கோரப் படற்பாலதான கழிப்பனவுகளுக்கமைய, பரஸ் பரமானதாயிருப்பினுஞ்சரி அல்லது தனி உரிமை முறையிலானதாயிருப்பினுஞ்சரி ஆயுள் காப்புறுதித் தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆளொருவரின் விடயத்தில், அத்தொழிலிலிருந் தான எந்த ஈட்டுகைகளினதும், இலாபங்களினதும் மீது 2025, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கான வரி செலுத் தப்படற்பாலதாயுள்ளதோ அந்த தொழிலி லிருந்தான ஈட்டுகைகளும் இலாபங்களும் பின்வருவனவற்றின் கூட்டுமொத்தத்தை எடுப்பதன் மூலம் நிச்சயிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குப்படுத்

தும் சட்டத்தினுள் பணியாற்றுகின்ற நியமிக்கப்பட்ட விலைமதிப்பீட்டாளரினால் சான்றுப்படுத்தப்பட்டதான ஆயுட் காப்புறுதிப் பத்திரம் வைத்திருப்போர் நிதியத்திலிருந்து பங்குதாரர்களுக்கு விநியோகிக்கப்பட்ட அல்லது வழங்கப் பட்ட ஏதேனும் மிகைசேர் அல்லது ஏதேனும் பணத்தொகை; அத்துடன்

(ஆ) முதலீட்டு வருமானத்தைத் தோற்றுவிப் பதில் உறப்பட்ட எவையேனும் செலவு களைக் கழித்து, பங்குதாரரின் நிதியத்தின் அத்தகைய முதலீட்டு வருமானம்";

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "கொடுக்கப் பட்டவோர் ஆண்டில்' என்னும் சொற்களுக்குப் பதிலாக "2025, ஏப்ரல் 1 ஆந் தேதிக்கு முன்னரான கொடுக்கப்பட்டவோர் ஆண்டில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்";

(4) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(2அ) உட்பிரிவு (1அ) என்பதன் நோக்கத்துக்காக, 2025 ஏப்ரல் 1, ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னரான வரிமதிப்பீட்டாண்டொன்றுக்காக ஆயுட் காப்புறுதித் தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆளொருவரால் ஆயுட்காப்புறுதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு அல்லது அவர் சார்பில் பகிர்ந்தளிக்கப்படும் பங்கிலாபம், மிகையூதியம் அல்லது வேறு ஒத்த வடிவம் என்ற வகையாக வழங்கப்பட்ட மிகைசேர் உள்ளடங்கலாக தொகைகள் ஆயுட் காப்புறுதி தொழிலில் ஈடுபட்டுள்ள அவ்வாளின் ஈட்டுகைகளாகவும்

இலாபங்களாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க வரிக்கு அமைந்ததாதலும் வேண்டும்.”; அத்துடன்

(5) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை சேர்ப்பதன் மூலமும்:-

“(5) காப்புறுதி தொழிலுக்கு ஏற்புடையற்படற்பாலதான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மீட்டப்படுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின் நோக்கத்துக்காக, விடயமெதுவும் மதிப்பீட்டாண்டிலிருந்து தவிர்க்கப்படவில்லை அல்லது ஒரு தடவைக்கு மேல் கணக்கீடு செய்யப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய மீட்டலை தொடர்ந்து வரிமதிப்பீடுகளின் இயைபான ஆண்டுகளுக்கு அவசியமான சரிக்கட்டல்களைக் குறித்துரைக்கலாம்.”.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் “ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “2025, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை சேர்ப்பதன் மூலமும்:-

“(4) இரண்டாயிரத்து இருபத்தைந்து, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற மதிப்பீட்டாண்டிலிருந்து பயனுறுகின்ற இச் சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையின் 1 ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில்

குறிப்பீடு செய்யப்பட்ட நிறுவனமொன்று எனும் விடயத்தில், அத்தகைய உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட சேவைகளை வழங்குவதற் கான ஆகுசெலவு அத்தகைய நிறுவனத்தி னாலேயே பொறுக்கப்படுகின்றது என ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப் படுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, வரிமதிப்பீட்டாண்டுக்கான நிறுவனத்தின் வரிசெலுத்தப்படற்பாலதான வருமானத்தின் மீது செலுத்தப்படற்பாலதான வரிக்கு சமமான வரி வரவொன்றை ஆணையாளர் தலைமையதிபதி வழங்குதல் வேண்டும்.".

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 69 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 69 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் (ஈ) என்னும் பந்தியில் "இலங்கையில் வதிவுள்ளவராதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "இலங்கையில் வதிவுள்ளவராதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய தனியாளொருவர் இலங்கைப் பிரசையொருவராக அல்லது இலங்கை தவிர்ந்த வேறு ஏதேனும் நாடொன்றின் பிரசையாகவிருந்தால், அத்தகைய தனியாள் இலங்கையில் வதிவுள்ளவராகவிருப்பதற்கு கருதப்பட்டதாக இருக்கின்ற காரணத்தினால் அத்தகைய கப்பலில் தொழிலுக்கமர்த்தப்படுவதி லிருந்தான அவரது வருமானம் தவிர்ந்த ஏதேனும் வருமானம் தொடர்பில் வதிவுள்ளவொருவராக வருமான வரிக்கு ஆளாதலாகாது :

ஆயின், மேலும், இப்பந்தியின் கீழ் வருமான வரி நோக்கத்திற்காக மட்டும் இலங்கையில்

வதிபவராக கருதப்பட்ட எவரேனும் தனியாளொருவர் அவ்வாறு தொழிலுக் கமர்த்தப்பட்டுள்ள காலப்பகுதியின் போது இலங்கையில் வதிவுள்ளவராக பரிகரிக்கப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1அ) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், தனியாளொருவர் குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளரால் வழங்கப்பட்ட பொன்னாலான சுவர்க்கம் வதிவிட விசாவை கொண்டிருப்பின், அத்தனியாள் வரிமதிப்பீட்டாண்டொன்றிற்காக இலங்கையில் வதிவுள்ளவராதலாகாது.

(2அ) ஐயத்தை தவிர்ப்பதற்காக, தனியாளின் உடனடி இலங்கைத் தொழில்தருநருடன் இணையாதவொரு தொழில்தருநருடன் ஒரு வருடத்திற்கு குறையாத காலப்பகுதிக்கு ஒப்பந்தமொன்றின் கீழ், தொழிலுக்காக அத்தகைய தனியாள் இலங்கையிலிருந்து வெளியேறும் வரிமதிப்பீட்டாண்டின் முதல் நாளன்று தொடங்கி அத்தகைய ஒப்பந்தம் காலாவதியாகும் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியொன்றுக்கு அத்தகைய தனியாள் இலங்கையில் வதிவுள்ளவராக கருதப்படுதலாகாது என இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவைத் திருத்துதல்

**12**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவானது அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை சேர்ப்பதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

"(3) இரண்டாம் உட்பிரிவிற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், இலங்கையிலிருந்து பண்டங்கள் அல்லது சேவைகளை ஏற்றுமதி செய்வது தொடர்பிலான வரி மதிப்பீட்டாண்டொன்றில் அத்தகைய கொடுப்பனவானது உறப்பட்ட அளவிற்கு, இலங்கையில் மூலமொன்றை கொண்டிராத கொடுப்பனவொன்று வருமானத்தைக் கணக்கிடுவதில் நேரடியாக கழிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவைத் திருத்துதல்

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள் இலக்கமிடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவினால் மீள் இலக்கமிட்ட (1) ஆம் உட்பிரிவில் "உறப்பட்ட தொகையொன்றுக்காக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2025, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னரான ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டொன்றில் உறப்பட்ட தொகையொன்றுக்காக" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்,"; அத்துடன்

(3) அப்பிரிவின் மீள் இலக்கமிட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை சேர்ப்பதன் மூலமும்:-

"(2) இலங்கையின் நிரந்தர தாபனம் ஒன்றினூடாக தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற வதிவற்ற ஆள், தலைமை அலவலக செலவினம் என்ற தன்மையில் 2025 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று மற்றும் அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் ஏதேனும் செலவினம் உறப்படுகின்றவிடத்து, பின்வருவனவற்றுக்கு சமமான தொகையொன்று -

(அ) அத்தகைய செலவினத்தின் தொகையொன்று; அல்லது

(ஆ) அத்தகைய வியாபாரத்திலிருந்தான அத்தகைய ஆளொருவரின் மதிப்பிடற்பாலதான வருமானத்தின் பத்து சதவீதத்துக்கு சமமான தொகையொன்று,

இவற்றுள் எது குறைவாயிருக்கின்றதோ, அது அவ் வரிமதிப்பீட்டாண்டிற்காகக் கழிக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக வதிவற்ற ஆளொரு வருடனும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டொன்றுடனும் தொடர்பான "தலைமையலுவலகச் செலவினம்" என்பது பின்வரும் செலவினம் உள்ளடங்கலாக இலங்கைக்கு வெளியே அத்தகைய ஆளினால் அல்லது அவர் சார்பில் உறப்படும் நிறைவேற்று மற்றும் பொது நிருவாகச் செலவுகளையும் உள்ளடக்கும்-

(அ) இலங்கைக்கு வெளியே உள்ள அத்தகைய கம்பெனியின் ஏதேனும் அலுவலகத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்ட அல்லது அதன் அலுவல்களை முகாமை செய்யும் ஒவ்வொரு ஊழியரதும் மற்றும் ஒவ்வொரு வேறு ஆளினாலும் தொழிலிருந்தான மொத்த வருமானம் மற்றும் பொறுப்பு முயற்சியெடுக்கப்பட்டும் பிரயாணத்தின் மொத்த ஆகுசெலவிலிருந்துமான மொத்த வருமானத்தின் கூட்டுமொத்தத்தையும் உள்ளடக்கியது; அத்துடன்

(ஆ) இலங்கைக்கு வெளியேயான எவையேனும் வளவுகள் தொடர்பில் உறப்பட்டவை.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவைத் திருத்துதல்

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவை, அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியாக மீள் எழுத்திடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் மீள் எழுத்திட்ட (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை சேர்ப்பதன் மூலமும்:-

"(ஆ) 2026, ஏப்ரல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டி லிருந்து பயனுறும் வகையில், அத்தகைய அதிகாரசபையானது ஒவ்வொரு பஞ்சாங்க மாதம் முடிவடைந்த பின்னரான முப்பது நாட்களுக்குள் ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்பட்டவாறு, அத்தகைய விபரங்களையும் அத்தகைய முறையிலும் உள்ளடக்கியதுமான மாதாந்த வரி விபரத்திரட்டை கோப்பிடுதல் வேண்டும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) அம் உட்பிரிவில் –

(அ) "இப்பிரிவு" என்னும் சொல்லுக்குப் பதிலாக "இப்பிரிவு மற்றும் பிரிவு 84அ" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) இவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "ஒன்பதாம் பிரிவின்கீழ்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒன்பதாம் பிரிவின்கீழ்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை சேர்ப்பதன் மூலமும்:-

"(ஊ) 2025, ஏப்பிறல் 1 ஆம் தேதி யன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற வரிமதிப் பீட்டாண்டிற்காக இலங்கையில் வதியும் தனியாளொருவர் வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கு வரிவிதிக்கப்படற்பாலதான

வருமானத்தை கொண்டிராது விடின் அத்துடன் ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்பட்டவாறு நிதிசார் நிறுவனத்துக்கு சுய வெளிப்படுத்துகையொன்றை வழங்கியிருப்பின், அத்தகைய நிதிசார் நிறுவனத்தில் அத்தகைய தனியாளினால் பேணப்படும் ஏதேனும் வைப்பின் மீது தனியாளொருவருக்கான நிதிசார் நிறுவனத்தாலான வட்டி அல்லது கழிவுக் கொடுப்பனவு.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவைத் திருத்துதல்

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1இ) என்னும் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் 'கல்விமான் போன்ற சுயாதீன சேவை வழங்குநர் என்ற தன்மையில் அத்தகைய தனியாளினால் அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கல்விமான், கணக்காய்வாளர், மொடலர், தனியாள் பயிற்றுவிப்பாளர், பயிற்றுவிப்பாளர், மதிப்பீட்டாளர், கலைஞர், நடனக்காரர், பாடகர், இசையமைப்பாளர், நிகழ்ச்சி அமைப்பாளர், புகைப்படக்கலைஞர், காணொளி பதிவுக் கலைஞர், சிகிச்சையாளர், ஆலோசகர், அழகுக்கலை நிபுணர், சமையற்காரர், மின் திருத்துநர், பல் வைத்தியர், மிருக வைத்தியர், சமூக ஊடக நிபுணர், வணிக விளம்பர பிரதிநிதி, விளையாட்டு வீரர், தகவல் தொழிநுட்ப நிபுணர், விளம்பர முகவர், மதியுரைஞர், மொழிபெயர்ப்பாளர், எழுத்தாளர், கடன் வசூலிப்பவர் அல்லது எவரேனும் தனியாள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவைத் திருத்துதல்

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவானது அப்பிரிவின் (8)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

"(9) ஆணையாளர் தலைமையதிபதி, (2) ஆம் மற்றும் (8) ஆம் உட்பிரிவுகளின் கீழ் தேவைப் படுத்தப்பட்டுள்ள கூற்றுக்களை கோப்பிடுவதற்கான

நடவடிக்கைமுறைகள், வடிவங்கள் மற்றும் படிவங் களைக் குறித்துரைக்கலாம். ஒவ்வொரு பிடித்து வைத்தல் முகவரும் அத்தகைய நடவடிக்கைமுறைகள், வடிவங்கள் மற்றும் படிவங்கள் தொடர்பிலான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவைத் திருத்துதல்

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவானது அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

"(6) பிடித்துவைத்தல் முகவரொருவர், பிடித்து வைத்தற் சான்றிதழொன்றை ஏதேனும் விதிப்பனவு அல்லது கொடுப்பனவு இன்றி பிடித்துவைக்கப்பட்ட வருக்கு சேர்ப்பித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 90 ஆம் பிரிவைத் திருத்துதல்

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 90 ஆம் பிரிவானது அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள வாய்ப் பாடானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) தரப்பட்டுள்ள அவ்வாய்ப்பாட்டின் "அ" என்னும் விடயத்தில், "வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கென தவணைப்பணம் செலுத்துநரினால் 91 ஆம் அல்லது 92 ஆம் பிரிவின் கீழ் செலுத்தப்படற்பாலதான நடைமுறை மதிப்பிடப்பட்ட வரியாகவுள்ள விடத்து;" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(அ) 2026, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னரான ஏதேனும் வரி மதிப்பீட்டாண் டொன்றுக்கென தவணைப்பணம் செலுத்துநரினால் 91 ஆம் அல்லது 92 ஆம் பிரிவின் கீழ் செலுத்தப்படற்பாலதான மதிப்பிடப்பட்ட வரியாகவுள்ளவிடத்து; அத்துடன்

(ஆ) 2026, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக வரிமதிப்பீட்டு ஆண்டிற்கு நேர்முன்னர் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் வரி விதிக்கப்படற்பாலதான வருமானம் தொடர்பில் தவணைப் பணம் செலுத்து நரால் செலுத்தப்படற்பாலதான வரி தொகையாக உள்ளவிடத்து:

ஆயின், எவ்வாறாயினும், தவணைப் பணம் செலுத்துநருக்கு முற்போந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு வரி விதிக்கப்படற்பாலதான வருமானம் இல்லாதிருக்கின்றவிடத்து அல்லது நடப்பு வரி மதிப்பீட்டாண்டில் முற்போந்த வரி மதிப்பீட்டாண்டின் வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தைப் பெற எதிர்பார்க்கின்றவிடத்து, நடப்பு வரி மதிப்பீட்டாண்டிற்கு செலுத்தப் படற்பாலதான மதிப்பிடத்தக்க வரி ‘அ’ ஆகக் கருதப்படுதல் வேண்டும். இந்நோக்கத்துக்காக, நடப்பு வரி மதிப் பீட்டு ஆண்டிற்கு செலுத்தப்படற்பால தான மதிப்பிடப்பட்ட வரி, ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப் பட்ட நடவடிமுறை மற்றும் அதன் அடிப் படையின் மிது கணக்கிடப்படுதல் வேண்டும்;”;

(2) அவ்வாய்ப்பாட்டின் ‘C’ என்னும் விடயத்தின் (ஆ) என்னும் பந்தியில் “ஆண்டின் போது” என்னும் சொற்களுக்குப் பதிலாக “2026, ஏப்பிரல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு முன்னரான ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் போது” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;”;

(3) அவ்வாய்ப்பாட்டின் 'இ' என்னும் விடயத்தின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஆஅ) 2026, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கான ஆளொருவரின் வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப்பட்ட, அவ்வாளினால் பெறப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்து இயைபான வரிமதிப் பீட்டாண்டின் போது, பகுதி II இன் கீழ் பிடித்து வைக்கப்பட்ட அல்லது பிடித்து வைக்கப்பட வேண்டிய வரி;";

(4) அவ்வாய்ப்பாட்டின் 'இ' என்னும் விடயத்தின் (இ) என்னும் பந்தியின் காப்புவாசகத்தில் "ஆயின் எவ்வாறாயினும், தவணைப்பணம் செலுத்துந ரொருவரினால் செலுத்தப்படற்பாலதான மதிப் பிடப்பட்ட வரியைக் கணக்கிடுவதில்," என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆயின் எவ்வாறாயினும் 2026, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு முன்னர் தவணைப்பணம் செலுத்துநரொருவரினால் செலுத்தப்படற்பாலதான மதிப்பிடப்பட்ட வரியைக் கணக்கிடுவதில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்"; அத்துடன்

(5) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(6) 2026, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்கு பின்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கு தவணைப்பணம் செலுத்துநரினால் செலுத்தப்படற்பாலதான வரி தொகையை நிச்சயிப்பதில், அத்தகைய தவணைப்பணம் செலுத்துநர் 80 ஆம் பிரிவின்

கீழ் கோரப்படும் வெளிநாட்டு வரி வரவை கணக்கிலெடுக்கலாம். எவ்வாறாயினும், அவ்வாறு செய்கையில், தவணைப் பணம் செலுத்துநர் அத்தகைய வரியை செலுத்தின் அல்லது தவணைப் பணம் செலுத்துநர் அவ் வரிமதிப்பீட்டாண்டுக்கு நேரொத்த காலப்பகுதியின் போது, அத்தகைய வரி செலுத்தப்படுமென நியாயமாக மதிப்பிடின் மட்டுமே தவணைப்பணம் செலுத்துநர் வெளிநாட்டு வருமான வரியைக் கணக்கி லெடுக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 91 ஆம் பிரிவைத் திருத்துதல்

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 91 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "வரிமதிப் பீட்டாண்டொன்றுக்கான" என்னும் சொற் களுக்குப் பதிலாக "2026, ஏப்பிரல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற வரிமதிப் பீட்டாண்டொன்றுக்கான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "இப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவிற்கும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2026, ஏப்பிரல் 1 ஆந் தேதி தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு முன்னதான ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கான இப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவிற்கும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "வரிமதிப் பீட்டாண்டொன்றுக்கென" என்னும் சொற் களுக்குப் பதிலாக "2026, ஏப்பிரல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண் டொன்றுக்கென" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "தவணைப்பணம் செலுத்துநரொருவரின்" என்னும் சொற்களுக்குப்

பதிலாக "2026, ஏப்பிரல் 1 ஆந் தேதி தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டுக்கு முன்னர் தவணைப்பணம் செலுத்துநரொருவரின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(5) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் "உட்பிரிவு (5) இன் கீழ் ஆளொருவரால் கோப்பிடப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "2026, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு முன்னர் உட்பிரிவு (5) இன் கீழ் ஆளொருவரால் கோப்பிடப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்,".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 92 ஆம் பிரிவைத் திருத்துதல்

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 92 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பிரிவு 91 இன் கீழான மதிப்பீடொன்றை," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2026, ஏப்பிரல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு முன்னரான பிரிவு 91 இன் கீழான மதிப்பீடொன்றை" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவைத் திருத்துதல்

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "தனியாளொருவர்."; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தனியாளொருவர்; அல்லது"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை சேர்ப்பதன் மூலமும்:-

"(ஈ) இவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தனியாளொரு வரின் வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கான வட்டி வருமானம் ஐந்தாயிரம் ரூபாவிற்கு விஞ்சாது இருத்தல்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை சேர்ப்பதன் மூலமும்:-

"(2அ) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மூலோபாய முக்கியத்துவ மிக்க வியாபாரத்தை கொண்டு நடாத்துகின்ற எவரேனும் ஆள், ஆணையாளர் தலைமையதி பதியினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலும் முறையிலும் வரி விபரத்திரட்டை கோப்பிடுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 95 ஆம் பிரிவைத் திருத்துதல்

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 95 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள் இலக்கமிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் மீள் இலக்கமிட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) ஐயத்தை தவிர்ப்பதற்காக, 82 ஆம் பிரிவின் கீழான வரிச் செலுத்துகைக்கு மட்டுமே மூலதன ஈட்டுகை வரி பற்றிய விபரத்திரட்டொன்று சுய வரிமதிப்பீடொன்றாயமைதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.".

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 96 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதோடு அச்சட்டவாக்கத்தின் பிரிவு 96அ என்பதாக பயனுறுதலும் வேண்டும்:-

முதன்மைச் சட்டவாக்கத்தில் 96அ என்னும் புதிய உட்பிரிவை உட்புகுத்துதல்

"சம்பள நிலுவைக்கு வரி வரவின் ஏற்புடைமை

**96அ.**(1) ஊழியரொருவர் வரிமதிப்பீட்டாண்டொன்றில் ஏதேனும் சம்பள நிலுவையை பெற்றிருந்தவிடத்து, அத்தகைய ஊழியர் (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க கணக்கிடப்பட்ட வரி வரவிற்கு உரித்துடையவராதல் வேண்டும். அத்தகைய வரி வரவானது அவ்வரி மதிப்பீட்டாண்டிற்கான அவரது தொழில் வருமானத்திலிருந்து அத்தகைய ஊழியரால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியிலிருந்து கழிக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள வரி வரவானது பின்வரும் வாய்ப் பாட்டின் அடிப்படையில் கணக்கிடப்படுதல் வேண்டும்:-

$$A = B - C$$

*'A'* என்பது இப்பிரிவின் கீழ் அனுமதிக் கப்பட்ட வரிவர வொன்றாகும். நடப்பு வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கான சம்பள நிலுவையின் மேல் ஊழியரால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியிலும் விஞ்சாதிருத்தல் வேண்டும்;

*'B'* என்பது நடப்பு வரிமதிப்பீட்டாண்டிற் கான சம்பள நிலுவைக்கு ஊழியருக்கு செலுத்தப்படற்பாலதான வருமான வரியாகும். அது நடப்பு வரிமதிப் பீட்டாண்டின் மொத்த தொழில்

வருமானத்திற்கு செலுத்தப்படற்பாலதான வருமான வரிக்கு சமமாகும். சம்பள நிலுவை உட்பட, மொத்த தொழில் வருமானத்தின் மீது செலுத்தப்படற்பாலதான வருமான வரியை குறைக்குமிடத்து;

'*C*' என்பது சம்பள நிலுவையானது பெறப்பட்ட ஒவ்வொரு முன்னைய வரி மதிப்பீட்டாண்டிற்கு ஏற்புடைய வரிச் சட்டத்தின் நியதிகளின் படியாக கணக்கிடப்படுவதான செலுத்தப் படற்பாலதான வருமான வரியாகும்.

(3) இப்பிரிவில் "சம்பள நிலுவை" என்பது ஊழியமொன்றில் மீண்டும் பணிக்கமர்த்தப் பட்டதன் விளைவாக அல்லது ஒழுக்காற்று நவடிக்கையொன்றின் பின்னர் மீண்டும் ஒத்த ஊழியத்திற்கு நியமனம் செய்யப்பட்டதன் விளைவாக, முன்னைய தேதியிலிருந்து ஒரு பதவிக்கு பதவி உயர்வு, முன்னைய வரிமதிப்பீட்டாண்டின் முன்னைய தேதியிலிருந்து ஏதேனும் பதவி உயர்வுக்கான உரித்து மற்றும் ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக் கப்பட்ட ஒத்த காரணங்களின் விளைவாக, நடப்பு வரிமதிப்பீட்டாண்டில் ஆனால் அதே ஊழியத்திலிருந்து முன்னைய வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் ஊழியரொருவர் செய்த ஊழியத்தி லிருந்து கிடைக்கும் ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களாகும்.

(4) இப்பிரிவின் கீழ் வழங்கப்படும் வரி வரவானது, 83அ என்னும் பிரிவின் கீழ் முற்கூட்டிய தனிப்பட்ட வருமான வரி கழிப்பனவு செய்யப் படும் சூழ்நிலைகள் குறித்து ஆணையாளர் தலைமையதிபதியால் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) ஆணையாளர் தலைமையதிபதி, இப்பிரிவின் விண்ணப்பத்தின் மீது ஊழியரால் வரிக் கணக்காய்வுக்கு முன்னர் மீள்கொடுப்பனவுக்கான கோரிக்கை செய்யப்பட்ட தேதியின் மூன்று மாதங்களுக்குள் ஏதேனும் மீள்கொடுப்பனவு கோரிக்கையை செலுத்துதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவைத் திருத்துதல்

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் (ஏ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(ஏஅ) 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம், 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம் மற்றும் 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதல் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் கீழ் பணம் தூய்தாக்கல் தடுப்பு மற்றும் பயங்கரவாதி நிதி யளிப்பை எதிர்த்தல் தொடர்பிலான கடமைகளையும் பணிகளையும் புரியும் மற்றும் நிறைவேற்றும் நோக்கத்திற்கென இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் உளவறிதற்கூறின் பணிப்பாளருக்கு;

(ஏஆ) 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பணம் தூய்தாக்கல் தடுப்பு மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பை எதிர்த்தல் தொடர்பிலான கடமைகளையும் பணிகளையும் புரியும் மற்றும் நிறைவேற்றும் நோக்கத்திற்கென பொலிசு தலைமையதிபதிக்கு;

(ஏஇ) 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களை கண்காணிக்கும் சபையின் கடமைகளையும் பணிகளையும் புரியும் மற்றும் நிறைவேற்றும் நோக்கத்திற்கென அச்சட்டத்தின் கீழான அத்தகைய சபைக்கு;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவைத் திருத்துதல்

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:-

"(1அ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கம்பனியும் அத்தகைய கூட்டிணைப்பு அல்லது பதிவு செய்யப் பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு பிந்தாமல் ஆணையாளர் தலைமையதிபதியிடம் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 103 ஆம் பிரிவைத் திருத்துதல்

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 103 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

"(6) (அ) இப்பிரிவின் கீழ் வ.இ.இ குறித்தொதுக்கப்பட்ட ஆளொவ்வொருவருக்கும் ஆணையாளர் தலைமையதிபதி வ.இ.இ சான்றிதழை வழங்குதல் வேண்டும்.

(ஆ) 102 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட ஆளொருவர், 2026, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து பயனுறும் வகையில், கீழேயுள்ள பட்டியலின் நிரல் I

இல் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்கள் ஒவ்வொன்றுக்கும் வ.இ.இ சான்றிதழை சமர்ப்பிப்பதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாள் அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்கு அப்பட்டியலின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட இயைபான உத்தியோகத்தரின் பொறுப்பாதலும் வேண்டும்:-

பட்டியல்

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *நோக்கம்* | *இயைபான உத்தியோகத்தர்* |
| ஏதேனும் நிதி நிறுவனத்தில் ஏதேனும் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு | நிதி நிறுவனத்தின் முகாமையாளர் |
| கட்டட வரைபடமொன்றுக்கு அனுமதி பெறுவதற்கு | உள்ளூராட்சி அதிகார சபையின் தவிசாளர், அமுலாக்கல் பணிப்பாளர் அல்லது ஆணையாளர் |
| மோட்டார் வாகனமொன்றை பதிவு செய்வதற்கு | மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதி |
| மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கு | மாகாண இறைவரி ஆணையாளர் அல்லது பிரதேச செயலாளர் |
| காணியொன்றை அல்லது காணியொன்றுக்கான உரித்தொன்றை பதிவு செய்வதற்கு | பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் தலைமையதிபதி |
| தொழிலொன்றை பதிவு செய்வதற்கு | பிரதேச செயலாளர் |

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *நோக்கம்* | *இயைபான உத்தியோகத்தர்* |
| இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றின் பங்குகளை கைமாற்றுநர் மற்றும் கைமாற்றிக்கொடுப்பவரால் கைமாற்றுவதற்கு | கம்பனி பதிவாளர் நாயகம் |
| கடனட்டையொன்றை பெறுவதற்கு | வங்கி அல்லது கடனட்டை வழங்கும் நிறுவனத்தின் முகாமையாளர் |

(இ) இவ்வுட்பிரிவின் நோக்கத்திற்காக, (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஆணையாளர் தலைமை யதிபதியும் இயைபான உத்தியோகத்தரும் வ.இ.இ சான்றிதழை சரிபார்க்க மாற்று முறைமையொன்றுக்காக உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்ளலாம்.

(ஈ) ஆணையாளர் தலைமையதிபதி, இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளை வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவதற்காக வழிகாட்டு நெறிகளை வழங்கலாம்.

(7) இப்பிரிவின் ஏற்பாடுகள்-

(அ) 102 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஆணையாளர் நாயகத்தால் பதிவானது மறுக்கப்பட்ட ஆளொருவருக்கு; அல்லது

(ஆ) ஏதேனும் வேறு எழுதப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, வ.இ.இ சான்றிதழைப் பெற்றுக்கொள்வதிலிருந்து தடுக்கப்பட்ட ஆளொருவருக்கு,

ஏற்புடையதாதலாகாது.

(8) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, வ.இ.இ ஒன்றானது இரகசியமானதோ அல்லது அந்தரங்கமானதாகவோ இருத்தலாகாது.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவைத் திருத்துதல்

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவில் “(1இ) என்பதற்கமைய” என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக “(1இ) மற்றும் (1ஈ) என்னும் என்பதற்கமைய” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (1இ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை சேர்ப்பதன் மூலமும்:-

“(1ஈ) 2025, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிலிருந்து பயனுறும் வகையில், சிரேட்ட பிரசையொருவர் அத்தகைய ஆளின் வரிவிபரத்திரட்டை எழுத்திலோ அல்லது கணனி முறைமை அல்லது இலத்திரனியல் தொலைபேசி சாதனமூடாகவோ இலத்திரனியல் ரீதியில் கோப்பிடுதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவைத் திருத்துதல்

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவில் “ஆணையாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்படும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “2026, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்படும்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(8அ) (அ) வரி செலுத்துநரொருவர் அல்லது வேறு ஆளொருவர் 2026, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் இப்பிரிவின் அல்லது 123 ஆம் பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியால் குறிப்பாக தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் ஆவணத்தை அல்லது தகவலை (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் வழங்கத்தவறுகின்றவிடத்து, அத்தகைய ஆவணம் அல்லது தகவல் ஆணையாளர் தலைமையதிபதியுடனான உடன்படிக்கையுடன் அன்றி-

(i) வரிசெலுத்துநரால் அல்லது அத்தகைய வேறு ஆளினால் வரி மதிப்பீடொன்றை சவாலுக்குட் படுத்தி தொடுக்கப்படும் எவை யேனும் நீதிமன்ற நடவடிக்கைமுறை களில் ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது;

(ii) நூற்றி நாற்பத்தோராம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளவாறாக வரி செலுத்துநரின் எண்பிக்கும் பொறுப்பை புரியும் நோக்கத்துக்காக வலிதாதலாகாது; அல்லது

(iii) வரி மேன்முறையீட்டு ஆணைக் குழுவில் ஏதேனும் மேன்முறையீட்டு நடவடிக்கை முறையின் நோக்கத்துக் காக வலிதாதலாகாது.

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியால் இப்பிரிவின் அல்லது 123 ஆம் பிரிவின் கீழ் கோரப்பட்ட ஏதேனும் ஆவணம் அல்லது தகவல்-

(i) அத்தகைய ஆவணம் அல்லது தகவல் இலங்கையில் கிடைக்கக் கூடியதாயிருக்குமிடத்து, இப்பிரிவின் கீழ் கோரிக்கை விடுக்கப்பட்ட தேதியிலிருந்து அல்லது 123 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் காண்பிக்கப் படுதல் வேண்டும்; அல்லது

(ii) அத்தகைய ஆவணம் அல்லது தகவல் இலங்கையில் கிடைக்கக்கூடிய தாயிருக்காதவிடத்து, இப்பிரிவின் கீழ் கோரிக்கை விடுக்கப்பட்ட தேதியிலிருந்து அல்லது 123 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒன்பது மாதங்களினுள் காண்பிக்கப் படுதல் வேண்டும்.

(இ) ஐயத்தை தவிர்ப்பதற்காக, (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட கால அளவு வரி உத்தியோகத்தர்களினால் செய்யப்பட்ட தகவல் கோரிக்கைக்கான கால அளவின் நீட்டிப்பாக கருதப்படுதலாகாது என்பதுடன் வரி செலுத்துநர் அல்லது ஏனைய ஆள் ஏதேனும் அறிவித்தலில் வரி உத்தியோகத்தரினால் கோரப்பட்ட எவையேனும் தகவலை கொடுத்துதவுவதில் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட கால அளவுடன் இணங்கியொழுகுதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.".

**29.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவைத் திருத்துதல்

"(7) தனியாளொருவர், 2025, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப் பீட்டாண்டிலிருந்து பயனுறும் வகையில், ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டொன்றுக்காக (இவ்வுட் பிரிவில் "நடப்பு வரிமதிப்பீட்டாண்டொன்று" என குறிப்பீடுசெய்யப்படும்)-

(அ) நடப்பு வரிமதிப்பீட்டாண்டுக்கு உடன் முற்போந்த வரிமதிப்பீட்டாண்டிற்கான வரிவிதிக்கப்படற்பாலதானவருமானத்தில் செலுத்தப்படற்பாலதான வரியின் நூற்றிருபது சதவீதத்திற்கு குறையாத தொகையொன்றுக்காக வருமான விபரத் திரட்டை கோப்பிட்டதுடன் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அத்தகைய தனியாள் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் தொடர்பாக வெளிப்படுத்தியுள்ளவிடத்து;

(ஆ) வரி மீள்கொடுப்பனவுக் கோரிக்கை யில்லாது முழுமையான வரித் தொகையை செலுத்தியுள்ளவிடத்து;

(இ) நடப்பு வரி மதிப்பீட்டாண்டுக்காக செலுத்தப்படற்பாலதான வரி தொடர் பாக மோசடி, தட்டிக்கழிப்பு, அல்லது வேண்டுமென்றே செய்யப்படும் தவறெதுவும் புரியப்படவில்லையென குறிப்பிடும் சத்தியக்கூற்றொன்று சமர்ப் பிக்கப்பட்டுள்ளவிடத்து,

அத்தகைய விபரத்திரட்டானது கோப்பிடப் பட்டதாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டு மென்பதுடன் நடப்பு வரிமதிப்பீட்டாண்டிற்காக இப்பிரிவின் கீழ் அத்தகைய விபரத்திரட்டுக்கு திருத்தங்களோ அல்லது மேலதிக மதிப்பீடுகளோ செய்யப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 150 ஆம் பிரிவைத் திருத்துதல்

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 150 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன் மூலமும்:-

"ஆயின், அத்தகைய வதிவுள்ள தனியாள் தவணைப்பணம் செலுத்துநராகவிராதவரும் அவரது மீளளிப்பு உரிமைக்கோரிக்கை 2025, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் அறுபதாயிரம் ரூபாவை அல்லது யூன் முப்பதாம் தேதியன்று, செத்தெம்பர் முப்பதாம் தேதியன்று, திசெம்பர் முப்பத்தியோராம் தேதியன்று மற்றும் மாச்சு முப்பத்தியோராம் தேதியன்று முடிவடைகின்ற ஏதேனும் காலாண்டுக்காக பதினைந்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான சிரேட்ட பிரசையொருவராகவிருப்பின், ஒரு வரிக் கணக்காய்வுக்கு முன்னர் அத்தகைய வதிவுள்ள தனியாளினாள் 2025, யூன் 30 ஆந் தேதிக்கு முன்னர் செய்யப்பட்ட அத்தகைய மீளளிப்பு உரிமைக்கோரிக்கை, மீளளிப்பு உரிமைக்கோரிக்கைத் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் செலுத்தப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(5) ஆளொருவர், காசு அடிப்படையிலான கணக்கீட்டின் கீழான அத்தகைய ஆளின் வருமானத்தை கணக்கிடுவதில் ஒரு தொகையை உள்ளடக்கி அதன் ஏதேனும் தொகையானது பின்னர் தொடக்க ஒப்பந்தத்தின் இல்லாதொழிப்பு அல்லது மாற்றத்தின் காரணமாக மீளளிக்கப்பட்டிருக்கின்ற விடத்து, அத்தகைய ஆள் தனது வருமானத்தைக்

கணக்கிடுவதில் உள்ளடக்கப்பட்டுள்ள தொகையை மீளளிப்புச் செய்யப்பட்ட தேதியிலிருந்து முப்பது மாதங்களுக்குள் அத்தகைய விஞ்சிய வருமான வரியை மீளறவிட விண்ணப்பித்தால் இப்பிரிவின் கீழ் மீளளிப்பதற்கான மீளளிப்புத் தொகையின் மீது செலுத்தப்பட்ட விஞ்சிய வருமான வரியை மீளளிப்புச் செய்வதற்காக விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராவார்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவைத் திருத்துதல்

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஆளொருவர்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "2026, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் ஆளொருவர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2026, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2026, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(4அ) (அ) 2026, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப் பீட்டாண்டிலிருந்து பயனுறும் வகையில், ஆளொருவர் வருமதியாகவுள்ள வரியை

செலுத்தத் தவறுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, (4ஆ) என்னும் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு செலுத்தத் தவறியவரின் விபரங்களை உள்ளடக்கிய சான்றிதழை செலுத்தத் தவறிய ஆள் வதியும் நியாயாதிக்கத்திலுள்ள அல்லது தொழில் இடம் அமைந்துள்ளவிடத்திலுள்ள உள்ளூர் எல்லையினுள்ளான நீதவான் நீதிமன்றத்தின் நீதவானுக்கு சமர்ப்பிக்கலாம்.

(ஆ) (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட சான்றிதழ் கிடைக்கப் பெற்றதன் மேல், செலுத்தத்தவறிய ஆளுக்கு எதிராக தவறுகையிலுள்ள வரியை அறவிட ஏன் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கக் கூடாதென்பதற்கான காரணங்களைக் காட்டுவதற்காக, நீதவான் செலுத்தத் தவறியவரை தனக்கு முன்னால் தோன்றுவதற்காக அழைப்பாணை விடுத்தல் வேண்டும்.

(இ) செலுத்தத் தவறிய ஆள், நீதிவானை திருப்திப்படுத்துவதற்கான போதிய காரணங் களை காட்டுவதற்கு தவறுகின்றவிடத்து தவறுகையிலுள்ள வரி, குற்றப்பணத்தினால் மட்டுமே தண்டிக்கப்படற்பாலதானதும் மறியற் றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதல்லாத தவறொன்றின் தவறுகையாளரின் மீது நீதிவான் மறியற்றண்டனையினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஈ) தவறொன்றுக்காக விதிக்கப்பட்ட குற்றப்பணக் கொடுப்பனவின் தவறுகை தொடர்பில் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிமுறைக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஈ) மற்றும் (ஐ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகள் தவிர்ந்த அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள் அதன்மீது ஏற்புடைமையாதல் வேண்மென்பதுடன் நீதிவான் அத்தகைய தண்டனையை விதிக்கும் நேரத்தில் செய்யப்பட்டிருக்கும் அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள் மூலம் ஏதேனும் பணிப்பை நீதிவான் ஆக்கலாம்.

(4ஆ) உட்பிரிவு (4அ) வில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சான்றிதழானது, தவறுகை யாளரின் பெயர் மற்றும் கடைசியாக அறியப்பட்ட தொழிலிடத்தின் அல்லது வதிவிட முகவரி என்பன உள்ளடங்கலாக இவ்வுட்பிரிவானது நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வரி, வட்டி, தண்டப்பணம் அல்லது செலுத்தப்படற்பாலதான ஏனைய தொகை உள்ளடங்கலாக இச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான வரி, வட்டி தண்டப் பணம் அல்லது வேறு ஏதேனும் தொகை பற்றிய விபரங்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(4இ) ஆணையாளர் தலைமையதிபதி 151 ஆம் பிரிவின் கீழ் வரி செலுத்துகைக்கான காலநீட்டிப்பொன்றை வழங்கியிருந்தாலொழிய, (4அ) என்னும் உட்பிரிவின் நோக்கத்துக்காக ஆணையாளர் தலைமையதிபதியால் சமர்ப்பிக்கப் பட்ட சான்றிதழொன்றின் ஏதேனும் கூற்றின் சரியான தன்மையை இப்பிரிவின் கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் நீதிவானால் கேள்விக்குட்படுத்தல் அல்லது விசாரணைக்குட்படுத்தப்படுதலாகாது என்ப துடன் இவ்வுட்பிரிவிலுள்ளதெதுவும் அத்தகைய சான்றிதழிலுள்ள ஏதேனும் கூற்றின் சரியான தன்மையை கருத்திற்கொள்ளவோ அல்லது முடிவு செய்வதற்கோ அல்லது மேன்முறையீடொன்று எவ்வரிமதிப்பீடு தொடர்பில் தவணைத் தவறுகையிலுள்ள வரி அறவிடப்படுகின்றதோ அவ்வரி மதிப்பீட்டுக்கெதிராக முடிவுறாதுள்ள நிகழ்வின் காரணங்களினால் மாத்திரம் முப்பது நாட்களை விஞ்சும் காலப் பகுதியொன்றுக்கான அத்தகைய வழக்கு நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவோ அல்லது மாற்றம் செய்யவோ நீதிவான் ஒருவரை அதிகாரமளிப்பதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதலுமாகாது.

(4ஈ) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிமுறைக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் (2) தொடக்கம் (5) வரையான உட்பிரிவுகளிலுள்ளதெதுவும் (4அ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் விடயத்துக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(4உ) உட்பிரிவு (4அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விடயத்தில், அவ்வுட்பிரிவினால் அவர் மீது விதிக்கப்பட்டதாக கருதப்படுகின்ற குற்றப்பணத்தை செலுத்தத் தவறினால், (6) ஆம் உட்பிரிவுக்கமைய செலுத்தத்தவறியவர் மறியற்றண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டும். நீதவான், அக்குற்றப் பணத்தொகையை செலுத்துவதற்கு நேரம் அல்லது அத்தொகையின் நேரடிக் கொடுப்பனவை தவணைகளில் செலுத்துவதற்கு அனுமதிக்கலாம்.

(4ஊ) நீதவான் (4அ) என்னும் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு காரணத்தைக் காட்டுவதற்கு நேரத்தை அனுமதிக்கும் அல்லது (4உ) என்னும் உட்பிரிவின்கீழ் குற்றப்பணக் கொடுப்பனவுக்காக முன்நிபந்தனையாக வழங்கப்படுவதற்கு பிணை தேவைப்படுத்தலாம் என்பதுடன் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XXXIV இன் ஏற்பாடுகள் தவறுகையாளர் பிணை வழங்குவதற்கு அவ்வாறு தேவைப்படுமிடத்து, ஏற்புடையதாதல் வேண்டும்.

(4எ) உட்பிரிவு (4உ) என்பதன் கீழ் தவணைகளில் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டுமென நீதவான் பணிக்கின்றவிடத்தும் மற்றும் அத்தகைய தவணைகளில் ஏதேனு மொன்றிற்காக கொடுப்பனவுகளில் தவணை தவறுகை ஏற்படுகின்றவிடத்தும், நடவடிக்கைகள் அப்போது எஞ்சியுள்ள செலுத்தப்படாத

எல்லாத் தவணைகளின் கொடுப்பனவிலும் செலுத்தப்படின், எடுக்கப்படலாம்.

(4ஏ) உட்பிரிவு (4அ) என்பதன் கீழான ஏதேனும் நடவடிக்கையில், வரி முறையாக மதிப்பிடப்பட்டு செலுத்தத் தவறியதற்காக ஆணையாளர் தலைமையதிபதியின் சான்றிதழ் போதுமான சான்றாதல் வேண்டுமென்பதுடன் வரி அதிகம், பிழை அல்லது மேன்முறையீட்டின் கீழுள்ளது என்ற ஏதேனும் வாதம் ஏற்றுக் கவனிக்கப்படுதலுமாகாது.";

(5) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "மூன்றாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(3) ஆம் உட்பிரிவில் அல்லது (4அ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(6) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் "(3) ஆம் உட் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற் களுக்கும் எண்ணுக்கும் பதிலாக " (3) ஆம் உட்பிரிவில் அல்லது (4அ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

முதன்மைச் சட்டவாக்கத்திற்கு 175அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**32.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கு 175 ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 175அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"அழைப்பாணை மற்றும் அறிவித்தல் களைச் சேர்ப்பித்தல்

**175அ**. நூறாம் பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், இவ் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதி அல்லது ஏதேனும் நீதிமன்றம் ஏதேனும் அறிவித்தல் அல்லது தோன்றுவதற்கான அறிவித்தல் அல்லது அழைப்பாணைகளை வழங்கியிருக்கின்றவிடத்து, அத்துடன் ஆணையாளர் தலைமையதிபதி அல்லது

அத்தகைய நீதிமன்றம் இயைபான ஆளுக்கு அத்தகைய அறிவித்தலை அல்லது அழைப்பாணையை சேர்ப்பிக்க அல்லது சேர்ப்பிக்கச் செய்வதற்கு இயலாது இருக்கின்ற விடத்து, அது அதன் உரிய அறிவித்தலை வழங்கும் நோக்கத்துக்காக சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் புழக்கத்திலுள்ள ஏதேனும் செய்தித்தாளில் அத்தகைய அறிவித்தல் அல்லது அழைப்பாணைகளின் விபரங்களை அத்தகைய அறிவித்தல் மற்றும் அழைப்பாணைகளை சேர்ப்பிப்பதற்கு அல்லது சேர்ப்பிக்கச் செய்வதற்கான இயலாமை பற்றி எழுத்தில் காரணங்களைப் பதிவு செய்ததன் பின்னர், வெளியிடச் செய்தல் ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அத்தகைய நீதி மன்றத்துக்கு சட்ட முறையானதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 178அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**33.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கு 178 ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 178அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"பிடித்து வைத்தல் முகவர்கள் மற்றும் தனியாட் களினால் இணங்கி யொழுகாமை

**178அ.** (1) பிரிவு 86 இன் (9) ஆம் உட்பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடு களுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற பிடித்து வைத்தல் முகவர் ஒருவர் (2) ஆம் உட்பிரிவுக்கமைய வரிமதிப்பீட்டாண் டொன்றுக்காக இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு தொகைக்கான தண்டத்துக்கு ஆளாதல் வேண்டும்.

(2) (அ) ஓராம் உட்பிரிவின் கீழ் தண்டப் பணத்தை மதிப்பீடு செய்ய முன்னர், ஆணையாளர் தலைமையதிபதி எச்சரிக்கை அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(ஆ) அறிவித்தல் சேர்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் (அ) என்னும் பந்தியின் கீழ் வழங்கப்பட்ட எச்சரிக்கை அறிவித்தலுடன் பிடித்து வைத்தல் முகவர் இணங்கியயொழுகின்றவிடத்து (1) ஆம் உட்பிரிவின் கீழ் தண்டமெதுவும் விதிக்கப் படுதலாகாது.

(3) பொய்யான அல்லது பிழைவழியுய்க்கின்ற விபரங்களுடன் 84 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் கீழ் சுய வெளிப்படுத்துகையொன்றை வழங்குகின்ற தனியாளொருவர், (4) ஆம் உட்பிரிவுக்கமைய இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத தண்டப் பணத்தொகையொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் தண்டத்தை மதிப்பிட முன்னர், ஆணையாளர் தலைமை யதிபதி, அத்தகைய ஆளினால் வழங்கப்பட்ட சுய வெளிப்படுத்துகை உள்ளடக்கப்பட்டுள்ள பொய்யான அல்லது பிழைவழியுய்க்கின்ற விபரங்களுடன் தனியாளுக்கு அறிவித்த லொன்றை வழங்குதல் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவின் கீழ் தண்டத்துக் காளாகிய தனியாளொருவர் 4 ஆம் உட்பிரிவின் கீழ் எவ் அறிவித்தல் வழங்கப்பட்டதோ அவ் அறிவித்தல் மீதான வெளிப்படுத்துகைக்குப் பதிலாக சுய வெளிப்படுத்துகையொன்றை சமர்ப்பிப்பத்தற்கு உரித்துடையவராதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்திற்கு புதிய அத்தியாயம் XVIIஅ இனை உட்புகுத்துதல்

**34.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 185 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அது அச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் XVIIஅ வாகப் பயனுறுதலும் வேண்டும்:-

## “அத்தியாயம் XVIIஅ

### தவறுகளுக்கான குற்றவழக்குத் தொடுப்பு

விபரத்திரட்டுகள் தொடர்பான குற்றங்களுக்கான குற்ற வழக்கு தொடுப்பு முதலியன

**185.அ.**(1) எவரேனும் ஆள்-

(அ) 86 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப் பட்டவாறாக வருடாந்தக் கூற்றை ஆணையாளர் தலைமையதிபதிக்கு கோப்பிடத் தவறுகின்றடத்து;

(ஆ) 93 ஆம் பிரிவின் கீழ் வருமான விபரத்திரட்டொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்கு கோப்பிடத் தவறுகின்றவிடத்து;

(இ) 102 ஆம் பிரிவினால் கீழ் தேவைப் படுத்தப்பட்டவாறாக ஆணையாளர்-தலைமையதிபதியுடன் பதிவு செய்யத் தவறுகின்றவிடத்து;

(ஈ) 123 ஆம் பிரிவின் கீழ் கொடுக் கப்பட்ட அறிவித்தலுக்கு இணங்கி யொழுகி ஆணையாளர்- தலைமை யதிபதி முன்னிலையில் தோன்றத் தவறுகின்றவிடத்து, அத்துடன்

(உ) 126 ஆம் பிரிவின் கீழ் வரி விபரத்திரட்டொன்று கொடுத்துதவ தவறுகின்றவிடத்து,

அறிவித்தல் சேர்ப்பித்து முப்பது நாட்களினுள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக அவர் அவசியமான படிமுறைகளை எடுத்திருந்தாலொழிய, ஆணையாளர்

தலைமையதிபதி இப்பிரிவின் கீழ் அவருக்கெதிராக சட்ட வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுமென குறிப்பிட்டு அத்தகைய ஆளுக்கு எழுத்திலான அறிவித்தலை சேர்ப்பித்தல் வேண்டும்.

(2) எவரேனுமாள், (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியாயமான காரணமின்றி ஆணையாளர் தலைமையதிபதியால் வழங்கப்பட்ட அறிவித்தலுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறையான விளக்கத்தின் பின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் நான்கு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கு அல்லது ஒன்றில் ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 193 ஆம் பிரிவைத் திருத்துதல்

**35.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 193 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "எழுத்து மூலம் அவ்வாறு செய்யுமாறு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எழுத்து மூலம் அவ்வாறு செய்யுமாறும் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கட்டளையுடன் இணங்கியொழுகியும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(2அ) (அ) தவறொன்றை இணக்குவதற்காக எவரேனும் ஆள் வேண்டுகோளொன்றை விடுக்குமிடத்து, இணக்கப்படுத்த நாடும்

தவறு தொடர்பில் அவரால் கோப்பிடப்பட்ட ஏதேனும் மேன்முறையீடு மற்றும் அத்தகைய மேன்முறையீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள மேன் முறையீட்டுக்கான ஏது, அத்தகைய மேன்முறையீடு அல்லது ஏது இதுவரை உள்ளவாறு மீளப்பெறுவதற்கு பொறுப்பு முயற்சித்தல் வேண்டும்,

(ஆ) மேன்முறையீடொன்று இணக்கப் படுத்தப்பட நாடுகின்ற தவறுடன் தொடர் புடைய ஏதுக்களையும் இச்சட்டத்தின் கீழான ஏனைய விடயங்கள் தொடர்பான ஏதுக்களையும் உள்ளடக்கியுள்ளவிடத்து, (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பொறுப்பு முயற்சியானது, இணக்கப்படுத்தப்பட நாடுகின்ற தவறு தொடர்பிலான ஏதுக் களுக்கு மாத்திரமே ஏற்புடைமையாதல் வேண்டுமென்பதுடன் வேறு விடயங்கள் தொடர்பிலான ஏதுக்கள் தொடர்பில் மேன் முறையீடானது தொடரப்படலாம்.”; அத்துடன்

(3) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(8) இப்பிரிவின் கீழ் தவறொன்றை இணக்குவதற்கான வேண்டுகோளொன்று செய்யப்படும்போது ஆணையாளர்- தலைமை யதிபதி, விதிக்கப்பட வேண்டிய கட்டணத்தை குறித்துரைக்கலாம்.

(9) அத்தகைய தவறானது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டமொன்றின் கீழான தவறொன்றுடன் நேரடியாக தொடர்பு பட்டதாகவோ அல்லது சம்பந்தப்பட்டதாகவோ அல்லது ஏதேனும் சட்ட வலுவுறுத்துகை முகவ ராண்மையால் புலனாய்வொன்று நடாத்தப்பட்ட தாகவோயிருந்தால், ஆணையாளர் தலைமை யதிபதி, இப்பிரிவின் கீழ் தவறொன்றை இணக்கு தலாகாது.”.

**36.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 195 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 195 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) "அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தின் (அ) என்னும் பந்தியின் (iv) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:-

"(iv) 2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை பட்டய வரிவிதிப்பு நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவர்;";

(2) "கம்பனி" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

""குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர்" என்பது, (351 ஆம் அத்தியாயமான) குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் எனப் பொருள்படும்;";

(3) "வட்டி" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தில் –

(அ) (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(அ) முதலின் மீள்கொடுப்பனவு அல்லாத தனிசு கடப்பாட்டின் கீழ் செய்யப் பட்ட கழிப்பனவொன்று அல்லது

கட்டுப்பணமொன்று உள்ளடங்கலான கொடுப்பனவொன்று;”; அத்துடன்

(ஆ) (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

“(இ) தனிசு கடப்பாடொன்று அல்லது பண்டமாற்று உடன்படிக்கை தொடர்பில் செய்யப்பட்ட பொறுப்பேற்பு, உத்தரவாதம் அல்லது செலுத்தப்பட்ட சேவைக் கட்டணம்;”; அத்துடன்

(4) “அரச சார்பற்ற ஒழுங்கமைப்பு” என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தில் “எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனம் ஒன்றை உள்ளடக்காது” என்னும் சொற்களுக்குப் பதிலாக “எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இச்சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையின் 1 ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தரும நிறுவனம் ஒன்றை உள்ளடக்காது;” என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 202 ஆம் பிரிவைத் திருத்துதல்

**37.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 202 ஆம் பிரிவானது அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“(2அ) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, (2) அம் உட்பிரிவானது –

(அ) 2018, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டொன்றிற்கு நீக்கப்பட்ட சட்டத்தின் 32 ஆம் பிரிவு 33 ஆம் பிரிவு மற்றும் 34 ஆம் பிரிவுகளின்

கீழ் அத்தகைய தொகை கழிப்பனவு செய்யப்பட்டிருந்தால், நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் அத்தகைய கழிப்பனவின் ஏதேனும் கழிப்பனவு செய்யப்படாத மீதி 2018, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்றுள்ளவாஷ எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் தொகையைக் கழிப்பனவு செய்வதற்கு;

(ஆ) நீக்கப்பட்ட சட்டத்தின் 137 ஆம் பிரிவின் அல்லது 138 ஆம் பிரிவின் கீழ் கற்பனை வரி வரவொன்றுக்கான அல்லது 2018, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டொன்றிற்காக நீக்கப் பட்ட சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வேறு ஏதேனும் வரி வரவொன்றுக்கான ஏதேனும் உரிமைக் கோரிக்கையொன்றுக்கு; அத்துடன்

(இ) 2018, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்கு பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்றிற்காக நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் ஏதேனும் வரி வீதமொன்றுக்கான அல்லது வரி விலக்களிப்பொன்றுக்கான விண்ணப்ப மொன்றுக்கு

ஏற்புடையதாதலாகாது என இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது.’’ .

முதன்மைச் சட்டவாக்கத்தின் 203 ஆம் பிரிவைத் திருத்துதல்

**38.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 203 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:-

“(6) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஆளொருவரின் இலாபங்களினதும் வருமானத்தினதும் முழுமையான அல்லது ஏதேனும் பாகத்திற்கு சலுகை வரி வீதம் ஏற்புடைமையாகின்ற விடத்து, அத்தகைய சட்டத்தின் இயைபான ஏற்பாடுகளில் குறித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் காலப் பகுதிக்கு அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியொன்றானது 2018, மாச்சு 31 அன்று முடிவடையவில்லையெனில் அத்தகைய சலுகை வரிவீதம் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவடையும் வரை தொடர்ந்து ஏற்புடையதாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் அத்தகைய சலுகை வரி வீதமானது, 2025, மாச்சு 31 ஆந் தேதிக்கு பின்னர் ஏற்புடையதாதலாகாது.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையைத் திருத்துதல்

**39.** முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ் அட்டவணையின் 1 ஆம் பந்தியின் (2) ஆம் உட்பந்தியின் (அ) என்னும் விடயத்தில் “10 சதவீதத்தில் வரி விதிக்கப்படுதல் வேண்டும்.” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“(i) ஓராம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் 10 சதவீதத்திலும்; அத்துடன்

(ii) ஓராம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து பயனுறுவதாக 15 சதவீதத்திலும்

வரி விதிக்கப்படுதல் வேண்டும்;”;

(2) அவ் அட்டவணையின் 2 ஆம் பந்தியின் (2) ஆம் உட்பந்தியின் (அ) என்னும் விடயத்தில் “10 சதவீதத்தில் வரி விதிக்கப்படுதல் வேண்டும்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“(i) ஓராம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் 10 சதவீதத்திலும்; அத்துடன்

(ii) ஓராம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து பயனுறுவதாக 15 சதவீதத்திலும்

வரி விதிக்கப்படுதல் வேண்டும்;”;

(3) அவ் அட்டவணையின் 3 ஆம் பந்தியின் (2) ஆம் உட்பந்தியின் (அ) என்னும் விடயத்தில் “10 சதவீதத்தில்” என்னும் சொற்களுக்கும் எண் களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“(i) ஓராம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் 10 சதவீதத்திலும்; அத்துடன்

(ii) ஓராம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து பயனுறுவதாக 30% சதவீதத்தில்”;

(4) அவ் அட்டவணையின் 4 ஆம் பந்தியில் (2ஆ) என்னும் உட் பந்தியில் (ஆ) என்னும் விடயத்தில்,

" ஏதேனும் மது அல்லது புகையிலைத் தயாரிப்பின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய உற்பத்தியின் ஏற்றுமதி தவிர்ந்த ஏதேனும் மது அல்லது புகையிலைத் தயாரிப்பிற்கான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(5) அவ் அட்டவணையின் 5 ஆம் பந்தியில் (2) ஆம் உட்பந்தியில் (அ) என்னும் விடயத்தில் "10 சதவீதத்தில்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(i) ஓராம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் 10 சதவீதத்திலும்; அத்துடன்

(ii) ஓராம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து பயனுறுவதாக 30 சதவீதத்திலும்";

(6) அவ் அட்டவணையின் 7 ஆம் பந்தியில் (2) ஆம் உட்பந்தியில் (அ) என்னும் விடயத்தில் "பத்து சதவீதத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

''(i) ஓராம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் 10 சதவீதத்தில்; அத்துடன்

(ii) ஓராம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து பயனுறுவதாக 30 சதவீதத்தில்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்

**40.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 அட்டவணையானது அவ்வட்டவணையின் 1 ஆம் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பந்தியின் (1அ) என்னும் உட்பந்தியில் “வழங்கப்படுதல் வேண்டும்.” என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும்:-

“வழங்கப்படுதல் வேண்டும்:

ஆயின், இவ்வுட்பந்தியின் கீழ் அதிகாரிக்கப்பட்ட மூலதன அனுமதிப்புக்கு தகைமையுடையவராக இருப்பதற்காக அத்தகைய ஆள் அத்தகைய ஏலவேயுள்ள பொறுப்பு முயற்சியை விரிவாக்குவதற்கு இலங்கை முதலீட்டு சபையானது குறிப்பாக அனுமதியளித்தல் வேண்டும்.”; அத்துடன்

(2) அப்பந்தியின் (2) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(2அ) வரிமதிப்பீட்டாண்டொன்றின் போது, அருவச் சொத்துக்கள் தவிர புதிய பொறுப்பு முயற்சியொன்றில், தேய்மானத் திற்குட்படற்பாலதான சொத்துக்களில் ஆளொருவரினால் செய்யப்பட்ட முதலீட்டின் 100% சதவீதத்துக்கு சமமான மூலதன அனுமதிப்பொன்று இலங்கையின் ஏதேனும் பாகமொன்றில் அத்தகைய பொறுப்பு முயற்சியில் பயன்படுத்தப்படுகின்ற அத்தகைய தேய்மானத் திற்குட்படற்பாலதான சொத்துக்களின் மொத்த முதலீடு 250,000 ஐ. அ.டொ. இனை விஞ்சுகின்ற ஆனால் 3 மில்லியன் ஐ. அ.டொ. இனை விஞ்சாது இருப்பின், அவ்வரி மதிப்பீட்டாண்டறிக்கை அத்தகைய ஆளுக்கு அளிக்கப்படுதல் வேண்டும். ”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் மூன்றாம் அட்டவணையைத் திருத்துதல்

**41.** முதன்மைச் சட்டவாக்கத்தின் மூன்றாம் அட்டவணை யானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ் அட்டவணையின் (அ) என்னும் பந்தியின் (iv) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன் மூலமும்:-

"(iv) அ. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டவை தவிர்ந்த கல்வி அமைச்சுடன் பதிவு செய்யப்பட்டதும், அத்துடன் அரசாங்கத்தினாலும் கல்வி அமைச்சினாலும் வழங்கப்படும் சுற்றறிக்கைகளைப் பின்பற்று வதற்கு பணிப்பாணையிடப்படுத்தப் படுவதுமான ஏதேனும் அரசாங்க உதவி பெறும் தனியார் பாடசாலை;

ஆ. இவ்வுட்பந்தியின் நோக்கங்களுக்காக "அரசாங்க உதவி பெறும் தனியார் பாடசாலை" என்பது, அரசாங்கத் திடமிருந்து தொடர்ச்சியாக அதன் தொழிற்பாட்டுக்கு அவசியமான பண உதவிகள் அல்லது அத்தியாவசிய மான பண்டபங்கள் எனும் வடிவத்தில் தொடர்ச்சியாக உதவி பெறும் தனியார் பாடசாலையாகும்;"

(2) அவ் அட்டவணையில் (ஐ) என்னும் பந்தியில் (ii) ஆம் உட்பந்தியில் "அத்தகைய ஆளினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கடன் தொகை வெளிநாட்டு நாணயத்தில் வங்கியூடாக அனுப்பப்பட வேண்டுமென்பதுடன் வரும்படியான கடன் இலங்கையினுள் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கமைவாக

அத்தகைய ஆளினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;";

(3) அவ் அட்டவணையின் (த) என்னும் பந்தியில் "84 ஆம் பிரிவின்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையால் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த வரி விபரத் திரட்டு காட்டப்பட்டுள்ளவாறாக அத்தகைய ஒவ்வோராளினாலும் பெறப்பட்ட ஒவ்வொரு தொகையின் அளவுக்கு 84 ஆம் பிரிவின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(4) அவ் அட்டவணையின் (நந) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்து வதன் மூலமும்:-

"(நநந) விமானப் போக்குவரத்து, மென் பொருள் உரிமங்கள் அல்லது இலங்கை விமானப்படையிலிருந்து ஏனையவை தொடர்பான சேவைகளுக்கான கட்டணமாக எவரேனும் வதிவற்ற ஆளொருவரிடமிருந்து 2025, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்கு பின்னர் பெறப்பட்ட ஏதேனும் தொகை; அத்துடன்

(5) அவ் அட்டவணையின் (ர) ஆம் பந்தியில் "சட்டத்தில் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டுக்காகவும் ஏற்பாடு செய்யப்பட்ட அளவுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைய" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் நான்காம் அட்டவணையைத் திருத்துதல்

**42.** முதன்மைச் சட்டவாக்கத்தின் நான்காம் அட்டவணையானது அவ்வட்டவணையின் 2 ஆம் பந்தியின் (5) ஆம் உட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில் "போக்கு வரத்தொன்றில் அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "போக்குவரத்தொன்றில் அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் ஐந்தாம் அட்டவணையைத் திருத்துதல்

**43.** முதன்மைச் சட்டவாக்கத்தின் ஐந்தாம் அட்டவணையானது, 1 ஆம் பந்தியில் (அ) என்னும் உட்பந்தியில் (i) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் விடயத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"(i) அ. பிணியாளர்களுக்கும் அல்லது தேவையுள்ளவர்களுக்கும் நிறுவனமயப்படுத்தப்பட்ட பராமரிப்பை வழங்குவதற்காக தாபிக்கப்பட்ட தரும நிறுவனம்; அல்லது

ஆ. 2025, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்கு பின்னர் அரசாங்கத்தின் சுகாதாரப் பராமரிப்பு அல்லது கல்விச் சேவைகளுடன் இணைந்து சுகாதார வசதிகளை வழங்குகின்ற சமூக சேவை ஒழுங்கமைப்புகளைப் பதிவு செய்வதற்காக நடைமுறையிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட நிறுவனம் ஒன்று; அத்துடன்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் ஆறாம் அட்டவணையைத் திருத்துதல்

**44.** முதன்மைச் சட்டவாக்கத்தின் ஆறாம் அட்டவணையானது அவ்வட்டவணையின் 4 ஆம் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் "வரி மதிப்பீட்டாண்டொன்றுக்காக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2025, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னரான வரி மதிப்பீட்டாண்டொன்றுக்காக" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

குறைந்த செலுத்துகை களுக்கும் பிந்திய செலுத்துகைக ளுக்குமான வட்டியை பதிவழித்தல்

**45.**(1) ஆணையாளர் தலைமையதிபதி, (2) ஆம் உட் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பின்வரும் சட்டங்களின் கீழ் விதிக்கப்படற்பாலதான குறைந்த செலுத்துகைகளுக்கும் தாமதச் செலுத்துகைகளுக்கும் மற்றும் எஞ்சியுள்ள நிலுவை களுக்கும் மீதான ஏதேனும் வட்டியை பதிவழித்தல் வேண்டும்:-

(அ) 2023, மாச்சு 31 ஆம் தேதியன்று முடிவடைகின்றதான வரி மதிப்பீட்டாண்டு வரை முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 157;

(ஆ) 2022 ஆம் ஆண்டின் 14 ம் இலக்க, மிகைக்கட்டண வரிச் சட்டம்; அல்லது

(இ) தனிசு மீள்கொடுப்பனவு அறவீட்டின் மீதான 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டம்.

(2) ஓராம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து ஆறு மாதகாலம் முடிவடைவதற்கு முன்னர் இயைபான வரி மதிப்பீட்டாண்டிற்காக ஆணையாளர் தலைமையதிபதியால் தள்ளுபடி செய்யப்பட்ட ஏதேனும் தொகை தவிர்ந்த முழுமையான வரித் தொகை மற்றும் ஏதேனும் ஏற்புடையற்பாலதான தண்டங்கள் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கமைவாக ஆணையாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வட்டியை பதிவழித்தல் வேண்டும்.

(3) ஐயத்தை தவிர்ப்பதற்காக –

(அ) ஓராம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏற்பாடு கள் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனையை வரி செலுத்துநர் பூர்த்திசெய்திருக்குமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய வரி செலுத்துநர் (2) ஆம்

உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகியுள்ளாரென கருதுதல் வேண்டும்;

(ஆ) இப்பிரிவின் ஏற்புடைமையின் நோக்கத் திற்காக, ஆணையாளர் தலைமையதிபதி வரிமதிப்பீட்டாண்டுகள் அல்லது வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதி என்பவற்றைத் தனிவேறானதாக கருதுதல் வேண்டுமென; அத்துடன்

(இ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 154 ஆம் பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமையதி பதியால் ஏதேனும் வரிச் செலுத்துகையின் முதன்மைத் தொகை வரி தொடர்பான வட்டியாக ஏற்புடைய தாக்கப்பட்டுள்ள விடத்து, வட்டியாக அவ்வாறு ஏற்புடையதாக்கப்பட்ட தொகை, இப்பிரிவின் ஏற்புடைமையின் நோக்கத்திற்காக மட்டும் வரியின் முதன்மைத் தொகையாக பிரிக்கப்படுதல் வேண்டுமென

இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

**46.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.